திரு. வி. எம். தேவராஜ் : வேலூர் சிறைச்சாலையில் மாணவர் தலைவர் மாசிலாமணி என்பவரை அடித்து அவர் வேலூர் மருத்துவ மனையில் இருக்கிறார். அவரைப்போய் நான் பார்த்து விட்டு வந்தேன். அது அரசாங்கத்திற்குத் தெரியவில்லை என்றால் வேடிக்கையாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பதில் இல்லை.)

அனந்தனாறு கால்வாய் சிமெண்ட் லைனிங் திட்டம்.

* கு. கா. வி. எண் 10—திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் ஓடுகின்ற அனந்தனாறு முழுமையும் சிமெண்ட் லைனிங் (lining) போடும் திட்டத்திற்கு 250 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது என்ன நிலையில் உள்ளது ?

(ஆ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து வந்துள்ள இத்திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மி. வின்செண்ட் : இத்திட்டத்தின் மூலம் எவ்வளவு ஆயிரம் ஏக்கர்கள் பயனடைகிறது? இதனால் எவ்வளவு அதிகமான அளவிற்கு உற்பத்தியாகிறது? இத்திட்டத்தின் பயன், செலவு இதன் விகிதாசாரம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 3,600 ஏக்கர் இருபோக சாகுபடி நன்செய் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 2,300 ஏக்கர் இருபோக சாகுபடி நன்செய் நிலங்களுக்கு பாசனப் பற்றாக்குறையைப் போக்குவதும் இத்திட்டத்தின் மூலம் சாத்தியமாகிறது. இதன் மூலம் 7,280 டன் கூடுதலாக உணவு உற்பத்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் பயன்—செலவு விகிதாசாரம் 3:096 : 1 என்றளவில்தான் இருக்கிறது.

1980 ஜூலை 9]

திரு. மி. வின்சென்ட் : அமைச்சர் அவர்களின் விளக்கம் இந்தத் திட்டம் இனிப்பான திட்டம் என்று ஊர்ஜிதம் செய்திருக்கிறது. நாகர்கோவில் விவசாயிகள் போராட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். வாதாடி வெல்லமுடியும் என்று துடிக்கும் நாகர்கோவில் விவசாயிகளுக்கு அவர்கள் வாழ்வு மலர இந்தத் திட்டத்தை அரசு கட்டாயம் எடுத்துக்கொள்ளும் என்று நம்பலாமா? எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இத்திட்டத்தின் பயன் செலவு விகிதாசாரம் இத்திட்டம் பொருளாதார ரீதியில் கட்டுபடியாகக் கூடிய திட்டமாகத் தெரிகிறது. எனவே அரசாங்கப் பரிசீலனையிலிருந்து நிச்சயமாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் நம்பலாம்.

திரு. துரை முருகன் : இந்தத் திட்டத்திற்கு சுமார் 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பேரவையில் அறிவிக்கப்பட்டது என்று மட்டுந்தான் இருக்கிறது. எப்போது அறிவிக்கப்பட்டது? அறிவிக்கப்பட்ட பிறகு, இது காண்ட்ராக்ட்டுக்கு விடப்பட்டதா? லைனிங் வொர்க் என்றால் பிரித்துப் பிரித்து கொடுத்துவிடுவார்கள். எப்படி நடக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியும். அப்படியில்லாமல் பெரிய ரிக்கக்னைஸ்ட் காண்ட்ராக்டராகப் பார்த்து முழுமையாக ஒப்படைத்து முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இல்லை என்றால் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு கொஞ்சங்கொஞ்சமாகப் பிரித்துக் கொடுத்து கமிஷன் வாங்கிக்கொள்வார்கள். வாங்காமலா இருக்கிறார்கள்? யார் வாங்குவார்கள்? நாட்டில் அவர்கள்தான் வாங்குவார்கள். அவர்களது ஆட்சி. பொதுப்படையாக திட்டம் நிறைவேறவேண்டும். ஆகவே ரிக்கக்னைஸ்ட் காண்ட்ராக்டரிடம் முழுமையாக ஒப்படைத்து, 'வெல் எஸ்ட்டாப்ளிஷ்ட் காண்ட்ராக்டரிடம்' இந்த காண்ட்ராக்ட் விடப்படுமா அல்லது துண்டுதுண்டாக விடப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கேள்விகள் கேட்கலாம், விளக்கங்கள் பெறலாம்; ஐயப்பாடுகளை நீக்கலாம். ஆனால், கேள்வி கேட்கும்போது குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது என்றிருக்கிறது. அதைத்தான் சொன்னார்கள். ஆளுங் கட்சியினர் கமிஷன் வாங்குகிறார்கள் என்று சொன்னது குற்றச்சாட்டு.

திரு. துரை முருகன் : நான் அப்படிச் சொல்லவில்லை. சில பேர்கள் கமிஷன் வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அது ஆளும் கட்சியாகவும் இருக்கலாம்; எந்தக் கட்சியாகவும் இருக்கலாம். நான் தனிப்பட்டவர்களைத் குற்றம் சாட்ட வில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுப்படையாகச் சொன்னால் பரவாயில்லை; குறிப்பிட்டுச் சொல்வது கூடாது என்பதுதான்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் விளக்கம் பெறவேண்டுமென்ற அடிப்படையிலே சில கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் இப்போதுதான் அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று சென்றமுறை மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சராக இருந்த திரு. குழந்தைவேலு அவர்கள் அவையிலே ஒரு உறுதியை அளித்திருக்கிறார்கள். அதே உறுதியை நானும் இங்கே நிச்சயமாக உறுதி செய்கிறேன். இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தின் பயன், செலவு விகிதாசாரம், பொருளாதார ரீதி எல்லாம் கட்டுப்படியாகக் கூடியதாக இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை ஆய்வு முடிந்தவுடன், அரசு செயல்படுத்தும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், இந்தத் திட்டம் யாரிடம் ஒப்படைத்தால் நலமாக இருக்கும் என்பதிலே இந்த அரசு நிச்சயமாக கவனத்தில் கொள்ளும். அவர்களுடைய பழைய அனுபவங்களை இங்கே பேசுவது என்பது எங்களுக்கு எச்சரிக்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பழைய கால அனுபவங்கள், கசப்பான நிகழ்ச்சிகள் இந்த ஆட்சியிலே தொடராது என்ற உறுதியினைத் தருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, பழைய அனுபவங்கள் என்று சொன்னால், அதிகாரிகள் பற்றிச் சொல்கிறேன். சில நேரங்களில் அதிகாரிகள் திட்டங்களை பாழ்படுத்துகின்ற முறையில் காரியங்கள் செய்வார்கள், சிலர் சில அரசியல் வாதிகள் அவர்களை மிரட்டி காரியங்கள் செய்ய முற்படுவார்கள். அந்த அடிப்படையிலேதான் ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்கிறேன். இந்தத் திட்டம் வெல் எஸ்டாபிலிஷ்ட் கன்ட்ராக்டர்களுக்கு விடப்படுமா? இதைத் தடுத்து நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

1980 ஜூலை 9]

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் அனுபவ ரீதியாகச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சியில் இருந்த நாங்கள் இந்த கசப்பான அனுபவங்களைப் பார்த்துவிட்டுப் பிறகு உங்களுக்குச் சொல்கிறோம் என்று அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் இதற்கு மிக்க நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக பழையதவறுகள் நடக்காது என்ற உறுதியினை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u> : தலைவர் அவர்களே, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம்தான், அந்தக் கட்சிக்காரர்கள் தான் அந்தமாதிரி என்று சொல்வது சரியல்ல. அண்ணா தி.மு.க. யார் யாரிடத்திலே இந்த மாதிரியான வேலைகளைக் கொடுத் திருக்கின்றது என்பதற்கு நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக முதலமைச்சர் அவர் களிடத்திலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, ஒரு கட்சிக்கு மட்டும் இது பொருந்தாது; மற்றவர்களுக்கும் இது பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. துரை முருகன்</u> : நான் பொதுப்படையாகத்தான் சொன்னேன். எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் சில அதிகாரிகள்.............................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உட்காருங்கள். நான் நின்றால் மைக் வேலை செய்யாது. இப்போது விவாத நேரமல்ல விவாத நேரம் வரும்போது, பேசலாம்.

<u>திரு. துரை முருகன்</u> : நான் பொறுப்போடு தான் கேள்வி கேட்கிறேன், அவை முன்னவர் அவர்கள் சொன்னதை ஒத்துக் கொண்டேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இது ஒரு சின்ன திட்டம் இதிலே பெரிய விவாதம் வேண்டாம்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u> : மை ஹம்பிள் சப்மிஷன் என்ன வென்றால், இந்தத் திட்டம் முறையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காக தன் ஆலோசனைகளைக் கேள்வி மூலமாக, அமைச்சருக்கு உதவுகின்ற முறையிலே சொன்னார் கள். அதோடு ஆளும் கட்சிக்கு உதவ வேண்டுமென்பதற்காக, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் திரு. துரைமுருகன் அவர்கள் இந்தக் கேள்வியை அமைத்தார் கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 9-20]

ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில்—He made a definite charge that it is past experience. Is it right? அவை முன்னவர் அவர்கள் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது என்று சொன்னார்கள், திருத்தினார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் முறையான பதில் சொல்லியிருந்தால் பிரச்சனை வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி—பதில் நேரத்திலே கேள்வி பதிலோடு நின்றுவிட்டால் பிரச்சினை வராது ஆறு ஓடுகிறது இனிமேல்தான் காண்டிராக்டுக்கு விடவேண்டும். அதை அரசியல் ஆக்க வேண்டாம். ஆற்றிலே போய் அரசியல் தேவையில்லை.

திரு. டி. மணி : சிற்றார் பட்டணம் கால்வாய்களில் சிமெண்ட் லைனிங் போடாததினால் கால்வாய்களில் விடப்படும் நீரில் பாதிக்குமேல் பாழ் அடைந்து விடுகிறது. எனவே, சிற்றார் பட்டணம்கால் கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் போடப் படுமா என அறிய விரும்புகிறேன். இது போன்று நெய்யார் இடது கரை கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் போடப் படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சிற்றாறு பட்டணங்கால் பற்றிய கருத்துரு அரசு கவனத்திற்கு வர வில்லை. அரசு கவனத்திற்கு வந்த பிறகு விரைவாக நட வடிக்கை எடுக்கப்படும்.

நகராட்சிகளில் கழிப்பிடங்கள் அமைக்கும் திட்டம்

* கு. கா. வி. எண் 11—டாக்டர் கே. பி. இராமலிங்கம், திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது சில நகராட்சிகளில் கட்டப்பட்டுள்ளது போல (Pay and use) கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் எல்லா நகராட்சிகளுக்கும் விரிவு படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அவைகளின் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள் வசம் கொடுக்கப்படுமா அல்லது நகராட்சிகளின் நேரிடை கண்காணிப் பில் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.